00009

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக்கல்வி உயர்சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022

இறுதிப் பரீட்சை

**EPC2422 / EPA2422 / ESC2222 – சிறுவர் உரிமை**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 01.07.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

- **பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.**

## பகுதி - I

1. காலணித்துவ ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் காணப்பட்ட சிறுவர் உரிமையின் நிலைமையை சுருக்கமாக விளக்குக.
2. “பிள்ளையின் விரும்பிய ஆர்வம்” என்பதனால் நீங்கள் கருதுவது யாது?
3. “சுவீகரம் (தத்தெடுத்தல்)” என்றால் என்னவென சுருக்கமாக விளக்குக.
4. பிள்ளையின் உயிர் வாழ்தல் நலன் என்பதற்கான **மூன்று** (03) அவசியமான நிபந்தனைகளை எழுதுக.
5. விளையாட்டும் ஓய்வுக்குமான உரிமை மறுக்கக்கப்பட்ட **ஐந்து** (05) வகையான பிள்ளைகள் யாவர்?
6. குடும்பமற்ற பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக அரசாங்கம் அமுல்படுத்தக் கூடிய உபாயங்கள் **ஐந்தினைக்** (05) குறிப்பிடுக.
7. “பங்குபெற்றலுக்கான உரிமை” என்னும் பதத்தினை சுருக்கமாக விளக்குக.
8. முன்பள்ளிப் பிள்ளைகளின் பாதுகாப்பதற்கான உரிமையைப் பாதுகாப்பதில் முன்பள்ளி ஆசிரியரின் வகிப்பங்குகள் **ஐந்தினைப்** (05) பட்டியலிடுக.

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

**i.** “வளர்ச்சியும் விருத்தியும்” என்பதனால் நீங்கள் கருதுவது யாது?

**(04 புள்ளிகள்)**

**ii.** முன்பள்ளி வயதுகளையுடைய பிள்ளைகளின் வளர்ச்சியையும் விருத்தியையும் உறுதிப்படுத்த பெற்றோர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டினை** (02) விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** மேலே நீங்கள் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பெற்றோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் **இரண்டினைக்** (02) குறிப்பிட்டு அவற்றினை இழிவளவாக்குவதற்காக விதந்துரைப்புக்களை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

10.

i. "சிறுவர் உரிமை" என்னும் பதத்தை வரையறுக்க.

(02 புள்ளிகள்)

ii. சிறுவர் உரிமை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் சாசனம் என்ன?

(08 புள்ளிகள்)

iii. ஐக்கிய நாடுகள் சாசனத்தின் பிரிவுகளை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

i. "சிறுவர் துஷ்பிரயோகம்" என்பதனால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விளக்குக.

(2 புள்ளிகள்)

ii. சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு துணைபோகும் **நான்கு** (04) காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. பாலியல் ரீதியான துஷ்பிரயோகத்திலிருந்து முன்பள்ளி செல்லும் வயதுடைய பிள்ளைகளை பாதுகாக்க முன்பள்ளி ஆசிரியர் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளின் படிமுறைகள் **ஐந்தினைக்** (05) குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

12.

i. உலக சுகாதார ஸ்தாபனத்தின் கருத்தின்படி "அங்கவீனம்" என்பதனால் கருதப்படுவது யாது?

(02 புள்ளிகள்)

ii. இலங்கையில் விஷேட தேவையுடைய பிள்ளைகளுக்கு அளிக்கப்படும் **இரண்டு** (02) சேவைகளை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. மேலே குறிப்பிட்ட சேவைகளை அளிப்பதற்காக இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

i. இலங்கையில் சிறுவர் உரிமை பற்றிய விழிப்புணர்வு தொடர்பான அச்சு ஊடகங்களின் **நான்கு** (04) குறைபாடுகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ii. இக்குறைபாடுகள் ஒவ்வொன்றுக்குமான காரணங்களைப் பரிசீலிக்குக.

(08 புள்ளிகள்)

iii. சிறுவர் உரிமை தொடர்பாக அச்சு ஊடகங்களின் குறைபாடுகளை நீக்க பொருத்தமான விதந்துரைப்புக்களை முன்வைக்குக.

(08 புள்ளிகள்)

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*